www.padippakam.com



10

# ஈழத்தவர் வரலாறு


## கி.மு. ஐந்தாம் நூற்றாண்டிலிருந்து கி.பி.1621ஆம் ஆண்டு வரை....

-செங்கை ஆழியான்-

நாகதீவு என்ற பெயரை இப்பிரதேசம் பெறுவதற்கு காரணமாக அமைந்தவர்கள், இப்பிரதேசத்தின் பண்டைய குடிமக்களாக வாழ்ந்திருந்த நாகர் என்ற இன மக்களாவர். யாழ்ப்பாணக் குடாநாட்டிற்குத் தெற்கே நாகர்களின் குடியிருப்புக்கள் அமைந்திருந்த பிரதேசம் உத்தரரட்டை அல்லது உத்தரதேசம் எனப்பட்டது. கதம்பநதி என்ற அருவியாற்றிலிருந்து கோகர்ணம் (திருகோணமலை) வரை இணைத்து ஒரு குவிவு வளைகோடு வரைந்தால், அந்த வளைகோட்டிற்கு வடக்கேயமையும் வடபிரதேசம் உத்தரதேசம் எனப்பட்டது. இந்த உத்தரதேசத்தில் மகாதீர்த்தம்(மாந்தை), குதிரைமலை(புத்தளம்), குருந்தை (முல்லைத்தீவு), பல்லவங்கம் (பதவியா), கோகர்ணம் (திருகோணமலை) முதலிய பகுதிகளில் தமது புரதாள குடியிருப்புக்களை அமைத்து வாழ்ந்தனர். இவற்றை விட உத்தரதேசத்தின் சிதறலாக ஆரண்யகமங்கள் (காட்டுக்கிராமங்கள்) காணப்பட்டன. நாகதீவும் உத்தரதேசமும் ஒருங்கே ஈழமண்டலம் என அழைக்கப்பட்டது. நாகதீவில் கதிரைமலையும் உத்தரதேசத்தில் மகாதீர்த்தமும் குதிரைமலையும் நாக குடியிருப்புக்களில் முக்கியமானவையாக விளங்கின.

யாழ்ப்பாண இராச்சியத்தின் பழைய பெயர்களில் குறிப்பிடத்தக்கது சிங்கை ஆகும். சிங்கை நகர் இதன் தலைநகரமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. யாழ்ப்பாணத்தை ஆண்ட ஆரியச்சக்கர வர்த்திகள் பொதுவாகச் சிங்கை நகரத்தின் ஆட்சியாளர் என வர்ணிக்கப்பட்டனர். சிங்கை ஆரியன், சிங்கை தங்கும் ஆரியர் கோமான், சிங்கையெங்கோமான் எனப் பல வகைப்பட்ட விருதுகள் இம்மன்னர்களுக்கு இலக்கியத்திலும் சாசனத்திலும் கொடுக்கப்பட்டுள்ளன. செகராசசேகரம் என்ற மருத்துவ நூலிலே செயம் பெறு சிங்கை நாடன் செகராசசேகரன் என மன்னன் வர்ணிக்கப்பட்டுள்ளான். ஆகவே சிங்கை அல்லது சிங்கை நாடு என்ற பெயர் வடவிலங்கை இராச்சியத்தின் ஒரு பெயராக வழங்கியிருக்கவேண்டும். கொட்டகமக்கல் வெட்டில் 'சிங்கை நகராரியன்' என்று யாழ்ப்பாண மன்னன் குறிப்பிட்டுள்ளான்.

வடவிலங்கை இராச்சியத்தின் இன்னொரு பெயராக மணவை, மணற்றி, மணற்றிடல் என்பன இருந்துள்ளன. மணவை என்ற பெயரின் திரிபுகளே ஏனைய பெயர்களாகும். யாழ்ப்பாண ஆரியச் சக்கரவர்த்திகளை செகராச சேகரமாலை, மணவை ஆரியவரோதயன், மணவையோர் கோன் செகராசசேகரமன், மணவை தந்தமால் எனக் குறிப்பிடுகின்றது. மணவை அல்லது மணற்றி என்ற பெயர் யாழ்ப்பாணக் குடாநாட்டிற்குரிய பொதுப்பெயராக இருந்துள்ளது. அது பின்னர் இன்றைய மேற்குப் பகுதிக்குரியதாக மாறியது. அவ்வாறு மாறிய வேளையில் மணற்றி (மணல் ஊர்) என்ற அர்த்தப்படும் வகையில் வலி (மணல்) கம(ஊர்) எனச் சிங்களப் பெயராக உருமாறியது எனப்பல அறிஞர் கருதுவர்.




தமிழருடைய வடவிலங்கை இராச்சியம் பண்டை நாளில் ஈழம் என்ற பெயரைப்பெற்றிருந்தது. இப்பெயர் முழு இலங்கைக்கும் வழங்கிய ஒரு பெயராகும். பூநகரிப் பிரதேசத்தின் தொல்லியலாய்வின் விளைவாகக் கிடைத்த பிராமி மட்பாண்ட ஓடுகளில் ஈலா, ஈழ என்ற வாசகங்கள் பொறிக்கப்பட்டுள்ளன. பூநகரிப் பிரதேசம் ஈழம் என்ற இராச்சியமாகக் கருதப்பட்டமைக்குரிய சான்றாக இதனை கருத இடமுண்டு. முதலாம் மாறவர்மன் சுந்தரபாண்டியனின் கல்வெட்டுக்களில் இந்த இராச்சியம் ஈழம் என்று குறிப்பிட்ப்பட்டுள்ளது. விஜயநகர காலத்துத் தென்னிந்தியக் கல்வெட்டுக்களும் யாழ்ப்பாணத்தை ஈழம் என்றே குறிப்பிடுகின்றன. வடவிலங்கை இராச்சியத்தை யாழ்ப்பாண அரசு என அழைத்தமை, 15 ஆம் நூற்றாண்டிற்குப் பின்னரேயாகும். 1435 இல் திருமாணிக்குழி எனுமிடத்தில் பொறிக்கப்பட்ட விஜயநகரக் கல்வெட்டிலே முதன் முதலாக யாழ்ப்பாணன் பட்டினம் என்ற பெயர் வடவிலங்கை இராச்சியத்திற்கும், ஈழம் என்ற பெயர் தென்னிலங்கை இராச்சியத்திற்கும் கொடுக்கப்பட்டுள்ளன. 15 ஆம் நூற்றாண்டுச் சிங்கள நூல்கள் ஆரியச் சக்கரவர்த்திகளின் அரசிருக்கையை 'யாபாபடுன' என்று குறிப்பிடுகின்றன.

எவ்வாறாயினும் வடவிலங்கை இராச்சியத்தின் பல்வேறு குறுநில மன்னர்கள் ஆங்காங்கு ஆட்சி செலுத்தி வந்துள்ளனர் எனத் துணியலாம். ஆரியர்கள் வட இந்தியாவில் நிலை கொண்டபோது திராவிடர்கள் ஆரியர்களால் நெருக்கப்பட்டு இந்தியாவின் தென்பாகத்திற்கும் இலங்கைக்கும் குடி பெயர்ந்தார்கள். அவ்வாறு இடம் பெயர்ந்த திராவிடர்களின் குடியேற்றம் நாகதீவில் மிகக் கூடுதலாக நிகழ்ந்திருத்தல்வேண்டும். தென்னிலங்கையில் சிங்களக் குடியேற்றம் வளர்வதாயிற்று. சேர். போல் பீரிஸ் என்ற அறிஞரின் கருத்துப்படி விஜயன் பிறப்பதற்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே வடவிலங்கையில் குடியிருப்புக்கள் விருத்தியுற்றிருந்தன என்பதாகும். இந்தியாவிலிருந்து ஆக முப்பது மைல் கடலே வடவிலங்கையைப் பிரிக்கின்றது. அதனை இலகுவில் கலங்களில் தாண்டி வடவிலங்கையில் குடியிருப்புக்கள் உருவாகின. இலங்கையின் பல பாகத்தில் ஆதித் திராவிட மக்கள் சடலங்களைப் பெருந்தாழிகளிலிட்டு அடக்கம் செய்த முது மக்கள் தாழிகள் அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளன. 1955 ஆம் ஆண்டு புத்தளம் - மறிச்சுக்கட்டி வீதியில் முது மக்கள் தாழி ஒன்றும் 1982 இல் ஆனைக்கோட்டையிலும் 1984 இல் குஞ்சுப் பரந்தனிலும் இத்தகு முதுமக்கள் தாழிகள் கண்டெடுக்கப்பட்டன. இவை விஜயனின் வருகைக்கு முன்னரே திராவிட நாகரீகம் இங்கு நிலை பெற்றிருந்ததைக் காட்டி நிற்கின்றன.

கி.மு. 2 ஆம் நூற்றாண்டிலிருந்து யாழ்ப்பாணப்பகுதியில் மக்கள் குடியேற்றம் இருந்தது என்பதைத் தொல்பொருட் சான்றுகள் திட்டவட்டமாக நிறுவுகின்றன. கந்தரோடைப் பிரதேசத்தில் குடியேறியிருந்த மக்கள் பண்பாட்டு முன்னேற்றம் அடைந்தவர்களாக கி.மு. நூற்றாண்டுகளிலிருந்து பிறநாடுகளுடன் தொடர்பு கொண்டு எழுத்தின் உபயோகத்தையும் அறிந்து வாழ்ந்தனர் என இதே சான்றுகளைக் கொண்டு அறியலாம். இவ்வாறே யாழ்ப்பாணத்தின் பிற பகுதிகளிலும் முன்னேற்றம் அடைந்த மக்கள் வாழ்ந்திருக்க வேண்டும்.

### முதலாவது சிங்களப் படையெடுப்பு

வடவிலங்கையில் நாகர்களதும் அவர்களோடு கலந்து திராவிடர்களினதும் குடியிருப்புக்கள் வளர்வது, தென்னிலங்கைச் சிங்கள ஆட்சியாளருக்கு தலையிடியைக் கொடுத்திருக்கவேண்டும். இந்தியாவுடனான சகல தொடர்புகளுக்கும் வடவிலங்கைத் துறைமுகங்ளுக்கூடாகவே (மாதோட்டம், ஜம்புக்கோளம்) நடந்து வந்தன. எனவே வட இந்திய ஆரியருக்கும் தென்னிலங்கை சிங்களவருக்கும் இடையே திராவிடக் குடியேற்றங்கள் அமைவது களையப்பட வேண்டியதாகப்பட்டிருக்கும். உத்தரதேசத்தை (வடவிலங்கை) தக்கணதேசத்தின் (தென்னிலங்கை) ஆதிக்கத்தினுள் வைத்திருக்க விருப்பு எழுந்தது. அதனால் கி.மு. 1 ஆம் நூற்றாண்டில் அல்லது அதற்கு முன்னர், தென்னிலங்கையிலிருந்து, ஈழ மண்டலத்தின் மீது பெரும் படையெடுப்பொன்று நிகழ்ந்திருக்கவேண்டும். அந்தக் கால கட்டத்தில் கந்தரோடை எனப்படும் கதிரமலையே ஈழ மண்டல ஆட்சியாளரின் தலைநகரமாக இருந்திருக்கவேண்டும். கந்தரோடையில் கிடைத்த மட்பாண்ட ஓடொன்றில் பொறிக்கப்பட்டுக் கிடைத்த பிராமி எழுத்துச் சாசனத்தின் வாசகம் பின்வருமாறு அமைந்துள்ளது.

(தொடரும்)

நவீன டிசைன்களில் அசல் 22 கரட் தங்க நகைகள், பட்டுப் புடவைகள், கூறைச் சேலைகள், பட்டு வேட்டிகள்.
ஆடவர், நங்கையர், குழந்தைகளுக்கான ரெடிமேட் உடுப்புக்கள், எவர்சில்வர் பொருட்கள், ஓடியோ–வீடியோ–சிடி., வார–மாத பத்திரிகைகள், சஞ்சிகைகள்.
மளிகை–மரக்கறி–கடலுணவு வகைகள்.
அனைத்தும் மலிவு விலையில் பெற்றுக்கொள்ள
ஆதவா ஆசியா சென்ரர்
TAUNUS Str.19
60329 FRANKFURT/ MAIN
TeL: 069/ 250361-2
Fax: 069/ 234045
ADAVAA ASIYA CENTAR

படிப்பகம்